# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

**கட்டளை 16, விதி 7 ன் கீழ் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த 2 ம் வாதியை இந்நீதிமன்றம் தானாக விசாரித்தது.**

O.S.No.24/2025

Deposition of witness for XW1

| | | |
|---|---|---|
| Name | : | மனோ |
| Father's Name | : | முத்தையா |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 30 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.06.2026.

<u>நீதிமன்ற விசாரணை</u>:

1. நான் இந்த வழக்கில் 2ம் வாதியாவேன். நான் என் தாயுடன் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருந்தேன். எனது தந்தைக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். இந்த வழக்கு 3 முதல் 5 பிரதிவாதிகள் எனது தந்தையின் மூத்த தாரத்து மகன்கள் என்றால் சரிதான்.

2. என் தந்தையின் முதல்மனைவி எனது தாயை திருமணம் செய்வதற்கு முன்பே இறந்துவிட்டார். என் தாய்க்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் 1993ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்தின் பயனாக நான், எனது தம்பி விக்னேஷ் பிறந்தோம். நான் 31.01.1995 ல் பிறந்தேன்.

3. எனது தாய், தந்தையின் திருமணத்தை நிரூபிக்கும் விதமாக எனது தாயாரின் திருமணப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளார். அதைப்பார்த்தாலே எனது தாயாருக்கு 10.11.1993ம் தேதியன்று எனது தந்தையுடன் திருமணம் நடைபெற்றது துலங்கும். எனது தாயாரின் முதம்மனைவி இறந்து 09.07.1992 ஆகும். இதை நிரூபிக்கும் விதமாக எனது தந்தையின் முதல்மனைவியின் இறப்புச்சான்றிதழ் பதிவிறக்க நகலை தாக்கல் செய்துள்ளார். அதன்படியே 09.07.1992 அன்று எனது தந்தையின் முதல்மனைவி இறந்தது துலங்குகிறது.

4. 3 முதல் 5 பிரதிவாதிகளுடன் எங்களுக்கு சரியான பேச்சுவார்த்தை கிடையாது, சண்டையும் கிடையாது. எனது தந்தை இறந்து இன்றிலிருந்து 2 ஆண்டுகளாகிறது. இந்த வழக்கை எனது தந்தைக்கு வாரிசு சான்றிதழ் வேண்டி தாக்கல் செய்துள்ளோம். எனது தந்தைக்கு 2 மனைவிகள் என்பதால் வட்டாட்சியர் வாரிசுசான்றிதழ் வழங்க மறுத்துவிட்டார்.

**வாதி தரப்பிலும், பிரதிவாதி தரப்பிலும் குறுக்குவிசாரணை இல்லை.**

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**